# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 36 | 4 Pages | 06.09.2023 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 36 | 4 பக்கங்கள் | 06.09.2023 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |

## தேர்தலில் இந்தியா என்ற சொல்லே பா.ஜ.க.வை விரட்டும்: தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்



சென்னை, செப். 6

வளர்ச்சிமிகு இந்தியாவாக மாற்றப் போகிறோம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடியால் இந்தியா என்ற பெயரை மட்டும்தான்மாற்றமுடிந்திருக்கிறது அரண்டவர் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பதைப் போல இந்தியா என்ற சொல்லே பா.ஜ.க.வை மிரட்டுகிறது

"இந்தியா" பெயர் "பாரத்" என மாற இருப்பதாக தகவல் வெளியாகி வரும் நிலையில், தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது: பாசிச பா.ஜ.க. ஆட்சியை வீழ்த்தும் கூட்டணிக்கு #INDIA என்று பெயர் சூட்டியதில் இருந்து பா.ஜ.க.வுக்கு இந்தியா என்ற சொல்லே கசந்துவருகிறது. இந்தியாவை வளர்ச்சிமிகு இந்தியாவாக மாற்றப் போகிறோம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடியால் ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா என்ற பெயரை மட்டும்தான் மாற்ற முடிந்திருக்கிறது. அரண்டவர் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பதைப் போல இந்தியா என்ற சொல்லே பா.ஜ.க.வை மிரட்டுகிறது. தேர்தலில் இந்தியா என்ற சொல்லே பா.ஜ.க.வை விரட்டும்! #IndiaStaysIndia இவ்வாறு டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

## பல்லடம் அருகே 4 பேர் கொலை: உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைப்பு, ஆம்புலன்ஸ் சிறைப்பிடிப்பு

பல்லடம், செப். 6

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே உள்ள கள்ளக்கிணறு குறை தோட்டம் பகுதியை சேர்ந்தவர் செந்தில்குமார் (வயது 47). பருத்திக் கொட்டை வியாபாரம் செய்து வந்தார். இவரது சித்தப்பா பழனிசாமியின் மகன் மோகன்ராஜ் (45).மாதப்பூர்பஞ்சாயத்துபா.ஜ.க., கிளை தலைவராக இருந்தார். இந்த நிலையில் பணம் கொடுக்கல் வாங்கல் விவகாரம், வழிப்பாதையில் அமர்ந்து மது அருந்தியது தொடர்பான பிரச்சினையில் நேற்று முன்தினம் இரவு நெல்லை மாவட்டம் வடக்கு அரியநாயகிபுரத்தை சேர்ந்த வெங்கடேசன்(27) திருச்சி மாவட்டம் மணப்பாறையை சேர்ந்த செல்லமுத்து (24) ,தேனி மாவட்டம் உத்தம பாளையத்தை சேர்ந்த சோனை முத்தையா (22) ஆகிய 3 பேரும் சேர்ந்து செந்தில்குமார், மோகன் ராஜை வெட்டிக்கொன்றனர். அதனை தடுக்க முயன்ற மோகன்ராஜின் தாயார் புஷ்பவதி, உறவினர் ரத்தினம்மாள் ஆகியோரையும் வெட்டிக்கொன்றனர். ஒரே குடும்பத்தில் 4 பேர் வெட்டி கொலை செய்யப்பட்ட சம்பவம் பல்லடத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. கொலையாளிகளை கைது செய்யக்கோரி பொதுமக்கள், பா.ஜ.க.வினர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது. இதையடுத்துபல்லடத்தில்4மாவட்டத்தை சேர்ந்த 700க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் கொலையாளிகளை பிடிக்க 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளது. தனிப்படை போலீசார் கொலை சம்பவத்தில் ஈடுபட்ட செல்லமுத்துவை திருப்பூர் மாவட்டம் குண்டடத்தில் கைது செய்தனர். மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றபோது வாகன சோதனையில் போலீசார் அவனை மடக்கினர். மேலும் இந்த கொலையில் முக்கிய குற்றவாளியான வெங்கடேசனை பிடிக்க தனிப்படை போலீசார் நெல்லை மாவட்டம் முக்கூடல் பகுதியில் முகாமிட்டு தேடி வருகின்றனர். வெங்கடேசன் மீது முக்கூடல், சுத்தமல்லி உள்ளிட்ட போலீஸ் நிலையங்களில் கொலை, கொலை முயற்சி, அடிதடி உள்ளிட்ட பல்வேறுவழக்குகள்உள்ளது.தேனியை சேர்ந்த சோனை முத்தையாவையும் தனிப்படையினர் வலைவீசி தேடி வருகின்றனர். இதனிடையே பல்லடம் அரசு ஆஸ்பத்திரியில் பிரேத பரிசோதனைமுடிந்து கொலையான 4 பேரின் உடல்களும் வைக்கப்பட்டுள்ளன. ஆனால் கொலையாளிகளான மற்ற 2பேரையும் கைது செய்தால் மட்டுமே உடல்களை வாங்குவோம். அதுவரை உடல்களை வாங்க மாட்டோம் என்று கூறி உறவினர்கள், பொதுமக்கள், பா.ஜ.க.வினர் தொடர்ந்து இன்று 2வது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் 4 பேர் கொலையை கண்டித்து இன்று பல்லடத்தில் கடையடைப்பு போராட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்தநிலையில் அந்த போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. இந்த நிலையில் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போதுஇரண்டுகுற்றவாளிகளையும் விரைவில் கைது செய்வோம் என உறுதியளித்தனர். இதனால் இன்று மதியம் உடல்களை பெற ஒப்புக் கொண்டனர். உடல்கள் தனித்தனி ஆம்புலன்சில் ஏற்றப்பட்டு கள்ளக்கிணறு பகுதிக்குகொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது திடீரென ஆம்புலன்சை சிலர் சிறைப்பிடித்தனர். இறுதி ஊர்வலத்தில் இந்து மக்கள் கட்சியினர் பங்கேற்க வேண்டுமென்பதால் ஆம்புலன்ஸ் சிறைப்பிடித்ததாக தெரிகிறது. போலீசார் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.



## மதுபானங்களை இரும்பு டின்களில் வழங்க விவசாயிகள் கோரிக்கை



பல்லடம், செப். 6

தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின்நிறுவனர்ஈசன்முருகசாமி கூறியதாவது: தமிழ்நாடு வீட்டு வசதி துறை அமைச்சர் சு. முத்துச்சாமியை ஈரோட்டில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தினர் நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தோம். இதன்படி தமிழ்நாடு அரசின் கூட்டுறவுத்துறை சார்பில் கடந்த 2021 ஆம் ஆண்டு கூட்டுறவு பயிர் கடன் தள்ளுபடி செய்யப்பட்டதில், பிப்ரவரி 1 ந்தேதி முதல் 7 ந்தேதி வரை பணத்தை திருப்பி செலுத்தி, கடன் தள்ளுபடி பட்டியலில் இடம்பெற்று, கடன்தள்ளுபடி சான்றிதழ் பெற்ற விவசாயிகளுக்கு பணத்தை திருப்பி அளிக்காமல் உள்ளதை, விரைந்து அளிக்க வேண்டும். தமிழ்நாடு அரசு கள் இறக்கி விற்க விதித்துள்ள தடையை நீக்க கோரியும், விவசாய விளை நிலங்களில் மது பிரியர்கள் குடித்துவிட்டு பாட்டில்களை உடைத்து வீசி எறிவதால், கால்களில் காயம் ஏற்படுதல், கால்நடைகள் காயம் படுதல் ஆகிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் கடுமையான சிக்கல் உள்ளதால், நிரந்தர தீர்வாக டாஸ்மாக்கில் விற்கப்படும் மதுபான பாட்டில்களுக்கு பதிலாக பிளாஸ்டிக் பவுச்களை வழங்க வேண்டும். பீர் பாட்டில்களுக்கு பதிலாக இரும்பு டின் வடிவத்தில் வழங்க கோரியும் கோரிக்கை மனு அளித்து வலியுறுத்தினோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## உடுமலை அருகே சேதமடைந்த கிராம சாலையை சீரமைக்க கோரிக்கை



உடுமலை, செப். 6

வாகனங்கள் ஆங்காங்கே பழுதாகி நின்று விடுவதால் பொதுமக்கள் விவசாயிகள் அவதிக்கு உள்ளாகி வருகிறார்கள். தொடர் போக்குவரத்து உள்ள இந்த சாலையில் முறையாக பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படுவதில்லை.

உடுமலையில் இருந்து கண்ணமநாயக்கனூர் கிராமத்துக்கு செல்வதற்கு பழனியண்டாள்நகர், ஜீவா நகர் ராயல் லட்சுமி நகர் வழியாக சாலை அமைக்கப்பட்டு உள்ளது. அதன் வழியாக பள்ளி கல்லூரிக்கு செல்லும் மாணவர்கள் நகர்ப்புற மற்றும் கிராமப்புற பொதுமக்களும் சென்றுவருகின்றனர்.விவசாயிகள் சாகுபடிக்கு தேவையான இடுபொருட்களை எடுத்துச் செல்வதற்கும் விளை பொருட்களை விற்பனைக்கு கொண்டு வருவதற்கும் இந்த சாலை பிரதானமாகும். இதன் மூலமாக குறுகிய நேரத்தில் குறைவான எரிபொருள் செலவில் உடுமலை நகரத்தை அடைய இயலும். இது குறித்து அந்த பகுதி மக்கள் கூறியதாவது: தொடர் போக்குவரத்து உள்ள இந்த சாலையில் முறையாக பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படுவதில்லை. இதனால் ஜீவாநகர் தொடக்கத்தில் இருந்து ராயல்லட்சுமி நகர் வரை உள்ள பகுதி முழுவதுமாக சேதம் அடைந்து உள்ளது. உடுமலை பிஏபி., கால்வாய் முதல் கண்ணமநாயக்கனூர் கிராமம் வரை உள்ள பகுதிஆங்காங்கேசேதம்அடைந்து உள்ளது. இதனால் வாகனங்கள் ஆங்காங்கே பழுதாகி நின்று விடுவதால் பொதுமக்கள் விவசாயிகள் அவதிக்கு உள்ளாகி வருகிறார்கள். இது குறித்து தகவல் தெரிவித்தும் சம்பந்தப்பட்ட நிர்வாகம் சாலையை சீரமைக்க முன்வரவில்லை.எனவே உடுமலை மத்திய பஸ் நிலையத்தில் இருந்து பல்வேறு பகுதிகளை கடந்து கண்ணமநாயக்கனூர் கிராமத்திற்குசெல்லும்சேதம்அடைந்த சாலையை சீரமைக்க முன்வர வேண்டும். அதன் முதல் கட்டமாக சேதம் அடைந்த பகுதியில் மண்ணைக் கொட்டி சமன்படுத்த சம்பந்தப்பட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## ஆளுநர் மாளிகை முன் தர்ணா: மம்தா பானர்ஜி ஆவேசம்



மேற்கு வங்காளம், செப். 6

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுக்கு எதிராக ஆளுநர் தொடர்ந்து இடையூறு செய்து வரும் நிலையில், பல்வேறு செயல்களில் தொடர்ந்து குறுக்கிட்டால், ஆளுநர் மாளிகை முன் தர்ணா போராட்டத்தில் ஈடுபடுவேன் என மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜி ஆவேசமாக தெரிவித்துள்ளார். இது குறித்து மம்தா பானர்ஜி கூறியதாவது: மேற்கு வங்காள மாநில சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள அனைத்து மசோதாக்களையும் கவர்னர் நிறுத்தி வைத்துள்ளார். பள்ளிகள், கல்லூரிகள் போன்ற விவகாரங்களிலும் தலையிடுகிறார். பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகள் போன்றவற்றில் ஆளுநர் தொடர்ந்து தலையிட்டால் நிதியை தடுத்து நிறுத்துவோம். மாநில அரசின் நிர்வாகத்தை முடக்க நினைக்கும்ஆளுநருக்கு எதிராக, ஆளுநர் மாளிகை முன் தர்ணா போராட்டத்தில் ஈடுபடுவேன். இங்கே ஒரு கவுரவ கவர்னர் உட்கார்ந்து இருக்கிறார். அவர் கல்லூரி, பல்கலைக்கழகங்களை தனியாக பார்ப்பேன் என்கிறார். நடுராத்திரியில் பல்கலைக்கழக துணைவேந்தர் மாற்றப்படுவதை எங்கேயாவது கேட்டிருப்பீர்களா?. ஒரேநாள் இரவில் முன்னாள் ஐ.பி.எஸ், முன்னாள் நீதிபதியை கொண்டு வந்துள்ளார். தன்னை ஜமீன்தார் என்று நினைத்து எல்லாவற்றையும் செய்கிறார். உங்களுடைய கட்டளைக்கு ஏதாவது கல்லூரி, பல்கலைக்கழகங்கள் கீழ் படிந்தால், நிதி வழங்குவதில் முட்டுக்கட்டை ஏற்படுத்துவேன். அதன்பின் துணை வேந்தருக்கு எப்படி சம்பளம் வழங்குகிறீர்கள் என்று பார்ப்போம். பேராசிரியர், ஆசிரியர்கள், ஊழியர்களுக்கு எப்படி சம்பளம் கொடுப்பீர்கள் என்று பார்க்கிறேன். இங்கே ஒவ்வொரு செயலுக்கும் பதிலடி உண்டு. இதில் சமரசம் கிடையாது'' எனத் தெரிவித்துள்ளார். சமீபத்தில் ஏழு பல்கலைக்கழகங்களுக்கு இடைக்கால துணை வேந்தர்களை மாநில அரசின் ஆலோசனையை பெறாமல் தன்னிச்சையாக கவர்னர் சி.வி. ஆனந்த போஸ் நியமித்தார். இதில் இருந்து மோதல் போக்கு அதிகமாகியுள்ளது.

## சவுகானை டோனியுடன் ஒப்பிடுவது, மிகப்பெரிய அளவில் அவமதிப்பதாகும்: சுர்ஜேவாலா



மத்திய பிரதேசம், செப். 6

மத்திய பிரதேச மாநிலத்தில் நவம்பர் மாதத்தில் சட்டமன்ற தேர்தல் நடைபெற இருக்கிறது. பா.ஜனதா சார்பில் முதல்வர் வேட்பாளர் அறிவிக்கப்படவில்லை என்றாலும், சிவராஜ் சிங் சவுகானுக்குத்தான் அதிக வாய்ப்புள்ளது. தேதி அறிவிக்கப்படாத நிலையிலும், பா.ஜனதா தலைவர்கள் மத்திய பிரதேசத்தில் தேர்தல் பிரசாரத்தை தொடங்கி விட்டனர். மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர், சிவராஜ் சிங் சவுகானின் தலைமையை (Leader) வெகுவாக பாராட்டினார். அத்துடன் டோனியுடன் ஒப்பிட்டார். டோனி இந்தியாவை வெற்றிகரமாக வழி நடத்தி 2011 உலகக்கோப்பையை வென்றார். அதேபோல் சிவராஜ் சிங் சவுகான் வரவிருக்கும் தேர்தலில் வெற்றி வாகை சூடுவார் எனக் குறிப்பிட்டிருந்தார். இதற்கு காங்கிரஸ் கட்சியின் சுர்ஜேவாலா, டோனியுடன் ஒப்பிடுவது, நட்சத்திர வீரர்களை மிகப்பெரிய அளவில் அவமதிப்பதாகும் எனத் தெரிவித்துள்ளார். இதுகுறித்து சுர்ஜேவாலா கூறுகையில் ''இந்த ஒப்பீடு மிகப்பெரிய வீரருக்கு மிகமிகப்பெரிய அவதிப்பாகும். சவுகான், பரிசோதனை அடிப்படையில் கூட ஒருவருக்கும் வாய்ப்பு வழங்காதவர். எப்போதெல்லாம் அவர் பேட்டிங் பிடிப்பாரோ? அப்போதெல்லாம் அவராகவே ஹிட் விக்கெட் ஆவார். இங்கே மத்திய பிரதேச அரசு ஹிட் விக்கெட் ஆகிறது'' என்றார். மேலும், இந்தியா பெயர் பாரத் என மாற்றப்பட இருப்பதாக வரும் செய்தி குறித்து கேட்டதற்கு ''பா.ஜனதா வேலைவாய்ப்பின்மை, விவசாயம், வறட்சி, இழப்பீடு, பணவீக்கம், வெறுப்பு, வளர்ச்சி போன்றவற்றை பற்றி ஒருபோதும் பேசியது கிடையாது. இதுபோன்ற வலை (சதி), பிரசாரத்தில் மக்களை மத்திய அரசு சிக்க வைக்கும். இது சகுனி வலை போன்றது.'' என்றார்.

## நம்முடைய தேசிய அடையாளம் பா.ஜனதாவின் தனிப்பட்ட சொத்து அல்ல: ஆம் ஆத்மி விமர்சனம்



டெல்லி, செப். 6

பாராளுமன்ற மக்களவை தேர்தல்விரைவில் நடைபெற இருக்கிறது. 2024 தேர்தலில் மோடி தலைமையிலான பா.ஜனதா கூட்டணியை தோற்கடிக்க எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. எதிர்க்கட்சிகள் தங்களுடைய கூட்டமைப்புக்கு இந்தியா (I.N.D.I.A.) எனப் பெயரிட்டுள்ளது. இது இந்திய நாட்டை குறிப்பது போன்று உள்ளதால், பா.ஜனதாவுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் மோடி கடுமையாக விமர்சனம் செய்திருந்தார். இந்த நிலையில்தான் குடியரசு தலைவர் மாளிகைதரப்பில்அனுப்பியஜி20உச்சிமாநாட்டிற்கானஅழைப்பிதழில் இந்திய குடியரசுத் தலைவர் என்பதற்குப் பதிலாக பாரத் குடியரசுத் தலைவர் என அச்சிடப்பட்டிருந்தது. ஏற்கனவே, சிறப்பு பாராளுமன்ற கூட்டம் கூட்டப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. இதனால் இந்தியா என்ற பெயரை பாரத் என மாற்றப்படலாம் என உறுதிப்படுத்தப்படாத தகவல் வெளியாகி வருகிறது. இந்த நிலையில், இந்தியா பாரத் சர்ச்சை குறித்து ஆம் ஆத்மி கட்சியின் ராகவ் சதா கூறுகையில் "நமது தேசிய அடையாளம் பா.ஜ.க.வின் தனிப்பட்ட சொத்து அல்ல" எனத் தெரிவித்துள்ளார். காங்கிரஸ் தலைவர் ஜெய்ராம் ரமேஷ் இதுகுறித்து கருத்து தெரிவித்த நிலையில், தற்போது ஆம் ஆத்மி தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

# கனரா வங்கி சார்பில் இலவச தொழில் பயிற்சி

திருப்பூர், செப். 6

திருப்பூர், அனுப்பர்பாளையம் புதூரில் அமைந்துள்ள கனரா வங்கி ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிலையம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: தொழில் செய்ய விருப்பமுள்ளவர்கள் பயன்பெறும் வகையில் ஏர்கண்டிசனர்,

ப்ரிட்ஜ் உள்ளிட்ட வீட்டு உபயோக பொருட்கள் சர்வீஸ் மற்றும் பராமரித்தால் தொடர்பான பயிற்சிகள் 30 நாட்கள் வழங்கபட உள்ளது. பயிற்சிக்கு எவ்வித கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை.

பயிற்சி காலை. 9.30 மணி முதல் மாலை 5.30 வரை நடைபெறும். பயிற்சி காலத்தில் காலை மாலை தேநீர், மதிய உணவு, பயிற்சி உபகரணங்கள் மற்றும் பயிற்சி சீருடை இலவசமாகவழங்கப்படும். தொழில் தொடங்க ஆலோசனை வழங்கப்படும்.

தொழில் பயிற்சி மட்டுமின்றி தொழிர்முனைவோர் மேம்பாட்டு பயிற்சியும் கற்றுத்தரப்படும். பயற்சியில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் ஆதார்நகல், குடும்ப அட்டை நகல், வங்கி கணக்கு புத்தகம், பான் கார்டு நகல், பாஸ்போர்ட் சைஸ் போட்டோ 4 ஆகியவற்றை வங்கிக்கு கொண்டு வர வேண்டும். பயிற்சியின் முடிவில் தேர்ச்சி பெற்ற அனைவருக்கும் மத்திய அரசின் ஸ்கீல் இந்தியா என்ற சான்றிதழ் வழங்கப்படும்.

திருப்பூரை சேர்ந்தவர்கள் மட்டுமே இதில் கலந்து கொள்ள முடியும். இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# செந்தில் பாலாஜி அமைச்சராக தொடர்வது குறித்து முதல்வர் தான் முடிவெடுக்க வேண்டும் சென்னை உயர்நீதிமன்றம்

சென்னை, செப். 6

அமலாக்கத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட செந்தில் பாலாஜி சிறையில் உள்ளார் அவருடைய இலாகாக்கள் மாற்றப்பட்ட போதிலும், அமைச்சராக நீடித்து வருகிறார்

தமிழக அமைச்சராக இருந்த செந்தில் பாலாஜி, சட்ட விரோத பண பரிமாற்ற தடைச்சட்ட வழக்கில், அமலாக்கத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். இதனால் அவரது இலாகாக்கள், மற்ற மந்தரிகளுக்கு பிரித்து வழங்கப்பட்டது. ஆனால், அமைச்சர் பதவியில் நீடித்தார். இலாகா இல்லாத மந்திரியாக செயல்படுவார் என தமிழக அரசு அறிவித்தது. இது தொடர்பாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கவர்னர் ஆர்.என். ரவி ஆகியோர் இடையே மோதல் ஏற்பட்டது. இறுதியில் செந்தில் பாலாஜி இலாகா இல்லாத அமைச்சராக நீடிப்பார் என்று தமிழக அரசு அரசாணை பிறப்பித்தது. இதற்கிடையே, இலாகா இல்லாத அமைச்சராக இருப்பதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு முன் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, தலைமை நீதிபதி அடங்கிய பெஞ்ச், ''செந்தில் பாலாஜி அமைச்சராக தொடர்வது குறித்து முதலமைச்சர்தான் முடிவெடிக்க வேண்டும்'' எனக்கூறி இந்த வழக்கை முடித்து வைத்தது. மேலும், தார்மீக ரீதியாக இது சரியானது அல்ல என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.



# கல்பாக்கம் அணுமின் நிலையம் சார்பில் அரசு பள்ளிக்கு ரூ1.3 கோடி செலவில் புதிய வகுப்பறை கட்டிடம்

மாமல்லபுரம், செப். 6

கல்பாக்கத்தில் உள்ள சென்னை அணுமின் நிலையம் தனது சி.எஸ்.ஆர் திட்டத்தின் கீழ் 1.3கோடி ரூபாய் செலவில் திருக்கழுக்குன்றம் அடுத்த குண்ணவாக்கம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், நான்கு வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டிடமும் அதற்கு தேவையான நாற்காலிகள், மேஜைகள் வழங்கவும் முடிவு செய்தது. அதன் கட்டுமானபணிகள் நடைபெற்று முடிவடைந்த நிலையில், மாணவர்களின் பயன்பாட்டிற்கு நிலைய இயக்குநர் ஷெல்கே திறந்து வைத்தார்.






விழாவில் அணுமின் நிலைய அதிகாரிகள் சுபாமூர்த்தி, வாசுதேவன், ஜெகன், ரவிச்சந்திரன், சின்ன கோவிந்தன், குண்ணவாக்கம் ஊராட்சி தலைவர் நித்தியானந்தம், தலைமை ஆசிரியை தங்கம் உட்பட பலர் பங்கேற்றனர்.

# நமது நாட்டை மதவாத நாடாக மாற்றுவதற்கு பா.ஜ.க. அரசு முயற்சி செய்கிறது வேல்முருகன் குற்றச்சாட்டு

கடலூர், செப். 6

கடலூரில் தமிழக வாழ்வுரிமைக் கட்சி நிறுவன தலைவர் வேல்முருகன் எம்.எல்.ஏ. நிருபர்களுக்கு பேட்டி அளித்ததாவது: இந்தியா என்பது பன்முகம் கொண்ட நாடாகும். இந்த நாட்டை மதவாத நாடாக மாற்றுவதற்கு பா.ஜ.க. அரசு முயற்சி செய்து வருகிறது. இந்த நிலையில் இந்தியாவில் ஒரே நாடு, ஒரே தேர்தல் என்ற திட்டத்தை பா.ஜ.க. அரசின் பிரதமர் மோடி தலைமையிலான அரசு குழு அமைத்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இதன் மூலம் ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்குவதோடு, இறையாண்மை எதிர்காலத்தில் கேள்விக்குறியாகும். பாசிச நடவடிக்கை என்பது விஷ விதை மண்ணில் புதைப்பதாகவும், ஆகையால் இந்தியர்கள் அனைவரும் ஒற்றுமையாக இதனை எதிர்க்க வேண்டும்.

ஆகையால் மத்திய அரசு உடனடியாக இக்குழுவை திரும்பப் பெற வேண்டும். ஒற்றை ஆட்சி முறை பேராபத்தும் பெரிய அபாயத்தையும் விதைக்கிறது. கடந்த பத்தாண்டு காலமாக அதிமுகவினர் மிகப் பெரிய ஊழல் செய்து உள்ளனர்.

அதனை தற்காத்துக் கொள்வதற்காக ஒரே நாடு ஒரே தேர்தல் என்பதனை ஆதரித்து உள்ளனர். அவர்கள் இந்தியாவை பாதுகாத்திட வேண்டும் என்ற அக்கறை இல்லாமல் சுயநலத்துடன் செயல்பட்டு வருகின்றனர். பா.ஜ.க. அரசு 7.5 லட்சம் கோடி மக்கள் வரிப்பணத்தை வீண் செய்துள்ளதாக இந்திய தணிக்கை துறை அறிக்கை சமர்ப்பித்து உள்ளது. இதில் தமிழகத்தில் 5 சுங்கசாவடியை சோதனை செய்தபோது சுமார் 128 கோடி கார்ப்பரேட் நிறுவனம் கொள்ளை அடித்திருப்பது வெட்ட வெளிச்சமாக தெரிய வந்துள்ளது.

ஆகையால் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் உடனடியாக 5 சுங்கச்சாவடியை இழுத்து மூடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தியாவில் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர் உள்ளிட்ட அனைத்து மதத்தினர் பல ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர்.

ஆனால் ஒற்றுமையை கெடுக்கும் விதமாக சட்டம் உள்ளிட்ட எந்த நடவடிக்கை கொண்டு வந்தாலும், கொசு, காலரா ஒழித்தது போல் பாசிசதன்மையை ஒழிக்க வேண்டும் என்ற நோக்கில் உதயநிதி ஸ்டாலின் கருத்து தெரிவித்து இருப்பதாக தெரிய வருகிறது. இவ்வாறு கூறினார்.

பேட்டியின்போது மாநகராட்சி கவுன்சிலர் கண்ணன், மாவட்ட செயலாளர் ஆனந்த், கவுன்சிலர் அருள்பாபு மற்றும் பலர் உடன் இருந்தனர்.

# குற்றச்சாட்டு சட்டரீதியாக குற்ற வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்

கோவை, செப். 6

கோவை, தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் அதன் பொதுச் செயலாளர் கு. ராமகிருஷ்ணன் தலைமையில் இன்று அந்த அமைப்பை சேர்ந்த வர்கள் கோவை மாநகர போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் புகார் மனு அளித்தனர். அந்த மனுவில் கூறியிருப்பதாவது: கடந்த 2 நாட்களுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் தமிழக அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியபோது அவர் கூறிய சனாதனம் குறித்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதத்தில் உத்தரபிரதேச மாநிலம் அயோத்தியை சேர்ந்த பரமஹம்ச ஆச்சாரியார் என்பவர் உதயநிதி ஸ்டாலினை கடுமையாக பேசியதோடு, அவரின் தலைக்கு ரூ.10 கோடி சன்மானம் அளிப்பதாகவும் பேசியது வேகமாக பரவி வருகிறது மேலும் பரமஹம்ச ஆச்சாரியார் வெளியிட்ட காணொலி காட்சிகள் வன்முறையைத் தூண்டும் விதத்தில் உள்ளது.



இவ்வகையில் ஒரு மாநில அமைச்சருக்கே கொலை மிரட்டல் விடுக்கின்ற வகையிலும் மற்றும் சமூகத்தில் கலவரத்தை தூண்டுகின்ற வகையிலும் பேசிய பரமஹம்ச ஆச்சாரியார் என்பவர் மீது சட்டரீதியாக குற்ற வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அவர்கள் அந்த மனுவில் கூறி உள்ளனர்.

# ரூ.4 கோடியில் கட்டப்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூட கட்டிடம் காணொலி காட்சி மூலம் முதல்அமைச்சர் திறந்து வைத்தார்

தாராபுரம் , செப். 6

தாராபுரம் ஊராட்சி ஒன்றியம் பஞ்சப்பட்டியில் ரூ.4 கோடியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அதை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, தலைமைச் செயலகத்தில் இருந்தபடி காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பங்கேற்றார். தாராபுரம் ஆர்.டி.ஓ. செந்தில் அரசன் தலைமை தாங்கினார். இணை இயக்குனர் (வேளாண்மை) மாரியப்பன், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், தாராபுரம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் எஸ்.வி.செந்தில் குமார், நகராட்சி தலைவர் கு.பாப்பு கண்ணன், ஊராட்சி மன்ற தலைவர் செல்வி ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கூறியதாவது:



வேளாண்மைத்துறையில் விவசாயிகளுக்கு தனியாக நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு கட்டணம் இல்லாத மின்சாரம், விவசாய கடன் தள்ளுபடி போன்றவற்றை செய்து விவசாயிகளுடைய வாழ்வாதாரத்தை முதல்அமைச்சர் மேம்படுத்தி வருகிறார்.

விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை இடைத்தரகர்களின் குறுக்கீடு இன்றி நியாயமான விலைக்கு விற்றுப்பயன்பெறுவதற்காகவும் விலை வீழ்ச்சி காலங்களில் விளைபொருட்களைக் கிட்டங்கியில் வைத்து பொருளீட்டுக்கடன் பெற்றுப்பயன்பெறுவதற்காகவும் அரசால் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதுவரை 1 லட்சம் விவசாயிகளுக்கு இலவசமின்சார இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. கூடுதலாக இந்த ஆண்டு 50 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என முதல்அமைச்சர் அறிவித்துள்ளார். நெல்லுக்கு கூடுதல் விலையை அறிவித்து மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டக்கூடிய வகையில் அரசை வழிநடத்துகிறார்.

அந்த வகையில், திருப்பூர் மாவட்டத்தில் 15 ஒழுங்கு முறை விற்பனைக்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. தாராபுரம் பகுதியில் கிட்டங்கி, பரிவர்த்தனைக்கூடம் உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் விவசாயிகள் தனியார் கிட்டங்கியில் இருப்புவைத்து வந்தனர். மேலும் அந்த கிட்டங்கிகள் தொலைவில் உள்ளதால் போக்குவரத்து செலவு மற்றும் அதிக வாடகை காரணமாக பொருளாதார இழப்பைச் சந்தித்து வந்தனர். இதனால் முதல்அமைச்சரால் இந்த கட்டிடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சர் பேசினார். 20 விவசாயிகளுக்கு பவர்டில்லர்களை அமைச்சர் வழங்கினார். மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் வி.கமலக்கண்ணன், நகரச் செயலாளர் எஸ்.முருகானந்தம், வி.சி.மகாதேவன், வேளாண் பொறியியல்துறை உதவி செயற்பொறியாளர் சரவணக்குமார், பொறியியல் துறை செயற்பொறியாளர் ஜெயக்குமார், முதுநிலை செயலாளர் (பொறுப்பு) இரா.சுரேஷ்பாபு. மாநில செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்பிரபாவதிபெரியசாமி, கவுண்டச்சிபுதூர் ஊராட்சி துணைத்தலைவர் நாச்சி முத்து, 3வது வார்டு உறுப்பினர் நர்மதா ஈஸ்வரன், நகராட்சி கவுன்சிலர்கள் ராஜேந்திரன், ஹைடெக் அன்பழகன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

# திருப்பூர் 22வது வார்டில் தார்ச்சாலை அமைக்க பூமி பூஜை: மண்டல தலைவர் கவுன்சிலர் தொடங்கி வைத்தனர்

திருப்பூர், செப். 6

புதிய தார்ச்சாலை அமைப்பதற்கான பூமி பூஜை நடைபெற்றது 22 வது வார்டு கவுன்சிலர் வி.ராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தனர்.

திருப்பூர் மாநகராட்சி 22 வது வார்டுக்குட்பட்ட சிவன் தியேட்டர் சாலை மற்றும் குறுக்கு சாலை தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.41 லட்சம் மதிப்பிலும், மாரியம்மன் லேஅவுட் முதல் வீதியில் ரூ.5 லட்சத்து 60 ஆயிரம் மதிப்பிலும் புதிய தார்ச் சாலை அமைப்பதற்கான பூமிபூஜை நடைபெற்றது. இதில் 1வது மண்டல தலைவர் உமாமகேஸ்வரி சிட்டிவெங்கடாசலம், 22 வது வார்டு கவுன்சிலர் வி.ராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தனர். இதில் 21வது வார்டு கவுன்சிலர் பத்மாவதி, 22வது வார்டு செயலாளர் ராஜ்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




# திருப்பூர் பூலுவப்பட்டியில் அப்போலோ சர்க்கஸ் தொடக்கம்

பெருமாநல்லூர், செப். 6

30 அடி உயரத்தில் இரண்டு துணிகளை கொண்டு பெண்களின் சாகச நிகழ்ச்சி அனைவரையும் மெய்சிலிர்க்க வைக்கிறது. மதியம் 1 மணி, மாலை 4 மணி, இரவு 7 மணி காட்சிகளாக 3 காட்சிகள் நடைபெறுகிறது.

திருப்பூர் பி.என்.ரோடு பூலுவபட்டியில் அப்போலோ சர்க்கஸ் நேற்று (திங்கட்கிழமை) மாலை முதல் தொடங்கப்பட்டது. இதில் மாநகராட்சி மேயர் என்.தினேஷ்குமார் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். மேலும் திருப்பூர் வடக்கு சட்ட மன்ற தொகுதி கே.என்.விஜயகுமார் எம்.எல்.ஏ., துணை மேயர் எம்.கே.எம்.பாலசுப்பிரமணியன் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். சர்க்கஸ் முதல் நாளிலே மக்கள் அதிக அளவில் கலந்து கொண்டு பார்த்து ரசித்தனர். இந்தியாவிலேயே மிகவும் பழமையானது அப்போலோ சர்க்கஸ். பல்வேறு நாடுகளில் நிகழ்ச்சி நடத்தி உலக புகழ் பெற்றது. அந்தரத்தில் ஸ்கைடைவ் நிகழ்ச்சி, கலைஞர்களின் அணிவகுப்பு, 30 அடி உயரத்தில் இரண்டு துணிகளை கொண்டு பெண்களின் சாகச நிகழ்ச்சி அனைவரையும் மெய்சிலிர்க்க வைக்கிறது. இடையிடையே கோமாளிகளின் நகைச்சுவை சிரிக்க வைக்கிறது. இந்த சர்க்கஸ் நிகழ்ச்சி குறித்து சர்க்கஸ் மேலாளர் பிரதீப் குமார் கூறியதாவது: திருப்பூர் பி.என். ரோடு பூலுபட்டியில் அப்போலோ சர்க்கஸ் தொடங்கப்பட்டுள்ளது . பல மாநிலங்களை சேர்ந்த ஜிம்னாஸ்டிக் வீரர்கள் சாகச நிகழ்ச்சிகளை நிகழ்த்த உள்ளனர். அந்தரத்தில் பார் விளையாட்டு, மரணம் கூண்டில் 3 பேர் பைக் சவாரி, கத்தி மேல் படுத்து சாகசம், நாவல் பல்டி , சீன கலைஞர்களிடம் பயிற்சி பெற்ற 12க்கும் மேற்பட்ட மணிப்பூர் கலைஞர்களின் சேர் அக்ரோபேட், ஸ்டிக் ஜக்விங், ரோப் பேலன்ஸ், ஸ்பிரிங் நட் சாகசம் உள்பட 25 வகையான சாகச நிகழ்ச்சிகள் தினமும் நடைபெற உள்ளது.



குழந்தைகளை மகிழ்விக்க கோமாளிகளின் தொகுப்பு நிகழ்ச்சி நடக்க உள்ளது. தினமும் 3 காட்சிகளாக நடைபெறுகிறது. மதியம் 1 மணி, மாலை 4 மணி, இரவு 7 மணி காட்சிகளாக நடைபெறுகிறது. டிக்கெட் கட்டணமாக முதல் வகுப்பு 200, இரண்டாம் வகுப்பு 150, மூன்றாம் வகுப்பு 100 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து மேலும் விவரங்களுக்கு 96776 62229, 9790493242 என்ற கைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும். இவ்வாறு அவர் கூறினார்.

# மது குடிக்க பணம் கேட்டு தாக்குதல் நடத்தியவர் கைது

வெள்ளகோவில், செப். 6

வெள்ளகோவில் போலீசார் கார்த்தி மீது வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மது குடிக்க பணம் கேட்டபோது கண்ணன் என்னிடம் பணம் இல்லை எனக் கூறியுள்ளார்.

வெள்ளகோவில், உப்பு பாளையம் ரோடு பகுதியைச் சேர்ந்த குருசாமி மகன் கண்ணன் (வயது 41) .தோட்டத்து தொழிலாளியான இவர், சம்பவத்தன்று காலை திருச்சி கோவை மெயின் ரோட்டில் உள்ள ஒரு டாஸ்மாக் அருகில் இருந்த போது,

அப்போது அங்கு வந்த சிவநாதபுரத்தைச் சேர்ந்த வீராசாமி மகன் கார்த்தி (54) என்பவர் கண்ணனிடம் மது குடிக்க பணம் கேட்டதாகவும், அப்போது கண்ணன் என்னிடம் பணம் இல்லை எனக் கூறியதாகவும், இதனால் இருவருக்கும் வாய் தகராறு ஏற்பட்டு கண்ணனை தாக்கியதாக கூறப்படுகிறது. இதனால் காயமடைந்த கண்ணன் திருப்பூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இது குறித்து வெள்ளகோவில் போலீசார் கார்த்தி மீது வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# பாலகிருஷ்ணாபுரம் மேம்பாலத்தில் சர்ச்சைக்குரிய வீட்டை இடித்து அகற்றிய அதிகாரிகள் உரிமையாளரின் மனைவி தற்கொலை முயற்சி



குள்ளனம்பட்டி, செப். 6

திண்டுக்கல் சிலுவத்தூர் சாலையில் பழனி கேட், திருச்சி கேட், கரூர் கேட் ஆகிய 3 ரெயில்வே தண்டவாளங்கள் உள்ளன. இந்த பாதையை கடந்த செல்ல பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமம் அடைந்தனர். இதனையடுத்து 3 ரெயில்வே தண்டவாளங்களையும் கடந்து செல்லும் வகையில் மேம்பாலம் அமைக்க கடந்த 2013ம் ஆண்டு அப்போதைய முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார். இப்பணிகள் தொடங்கப்பட்டு நகர்ப்புறத்தில் 29, ஊரக பகுதியில் 72 குடியிருப்புகள் பாலம் அமைக்கும் பணிக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அனைவருக்கும் இழப்பீடு வழங்கப்பட்ட நிலையில் முருகவேல் என்பவர் மட்டும் தனது இடத்தை காலி செய்ய மறுத்துவிட்டார். இதனால் பாலம் அமைக்கும் பணிகள் 100 சதவீதம் நிறைவடைந்த பின்பும் போக்குவரத்து தொடங்கப்படவில்லை. இதனிடையே கடந்த 2 மாதங்களுக்கு முன்பு மேம்பாலம் வழியாக தனியார் மற்றும் அரசு பஸ்கள் இயக்கப்பட்டது. ஆனால் இந்த பஸ் சேவை சில நாட்களிலேயே நிறுத்தப்பட்டது. இதனால் பாலகிருஷ்ணாபுரம், கோவிந்தராஜ்நகர், ராஜக்காபட்டி, ஏர்போர்ட் நகர், சிலுவத்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து திண்டுக்கல்லுக்கு பள்ளி, கல்லூரி செல்லும் மாணவர்கள், வேலைக்கு செல்லும் தொழிலாளர்கள் மிகுந்த சிரமம் அடைந்தனர். முருகவேல் தனது இடத்தை காலி செய்யாமல் ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். தனது 2 மகன்கள் மாற்றுத்திறனாளியாக இருப்பதால் அரசு வேலை வழங்கவேண்டும். தான் வசிக்க பட்டாவுடன் கூடிய இடம் வழங்கவேண்டும் என தெரிவித்தார். வழக்கை விசாரித்த நீதிமன்றம் அதனை நிறைவேற்றுமாறு உத்தரவிட்டது. சமரச பேச்சுவார்த்தைக்கு பின்னரும் முருகவேல் இடத்தை காலி செய்யவில்லை. இதனால் மேம்பாலத்தில் போக்குவரத்து தொடங்குவதில் சிக்கல் ஏற்பட்டது. இன்று காலை ஏ.டி.எஸ்.பி வெள்ளைச்சாமி தலைமையில் டி.எஸ்.பி உதயகுமார், தாலுகா இன்ஸ்பெக்டர் சந்திரமோகன் மற்றும் 50க்கும் மேற்பட்ட போலீஸ் பாதுகாப்புடன் நெடுஞ்சாலைத்துறை, வருவாய்த்துறை அதிகாரிகள் முன்னிலையில் வீடு இடித்து அகற்றப்பட்டது. வீட்டில் இருந்தவர்களை வெளியேற்றி அங்கிருந்த பொருட்களையும் அப்புறப்படுத்தி ஜே.சி.பி மூலம் இடித்து அகற்றினர்.

அப்போது வீட்டில் இருந்தவர்கள் அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மேலும் முருகவேலின் மனைவி சாணிப்பவுடரை குடித்து தற்கொலைக்கு முயன்றதால் பரபரப்பு ஏற்பட்டது. போலீசார் அவரை மீட்டு திண்டுக்கல் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் குழந்தைகள் நல அலுவலர், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஆகியோரும் வரவழைக்கப்பட்டு முருகவேலின் குழந்தைகளுக்கு பாதுகாப்பு வழங்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இச்சம்பவத்தால் அப்பகுதியில் பொதுமக்கள் அதிகளவு திரண்டதால் பரபரப்பு ஏற்பட்டது. பாலகிருஷ்ணாபுரம் மேம்பாலத்தில் பிரச்சினைக்குரிய வீடு இடிக்கப்பட்டதால் மீண்டும் இப்பகுதியில் போக்குவரத்து தொடங்கும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பள்ளி தூய்மை பிரசாரம் தொடர்பாக விழிப்புணர்வு

கரூர், செப். 6

பள்ளி தூய்மை பிரசாரம் தொடர்பாக விழிப்புணர்வு நடந்தது. கலெக்டர் பிரபுசங்கர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்

கரூர் மாவட்டம் மண்மங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளியில் நேற்று பள்ளிக்கல்வித்துறை சார்பில் பள்ளி தூய்மை பிரசாரம் தொடர்பாக எங்கள் பள்ளி, மிளிரும் பள்ளி என்ற நிகழ்ச்சி திட்டத்தின்கீழ் மாணவ, மாணவிகள் கலந்து கொண்ட விழிப்புணர்வு ஊர்வலத்தை கலெக்டர் பிரபுசங்கர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த விழிப்புணர்வு ஊர்வலமானது பள்ளி வளாகத்திலிருந்து மண்மங்கலத்தில் உள்ள முக்கிய வீதிகள் வழியாக சென்று மீண்டும் பள்ளி வளாகத்திற்கு வந்தடைந்தது. ஊர்வலத்தில் பொதுமக்கள் விழிப்புணர்வு தூய்மை பிரசாரத்தை வலியுறுத்தி பல்வேறு பதாகைகள் கையில் ஏந்தி சென்றனர். இதில் 100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். முன்னதாக எங்கள் பள்ளி, மிளிரும் பள்ளி என்ற நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் பள்ளி வளாகத்தில் கலெக்டர் மரக்கன்றுகளை நட்டு வைத்தார். இதனைத்தொடர்ந்து எங்கள்பள்ளி, மிளிரும் பள்ளி என்ற நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் தூய்மை பிரசாரம் தொடர்பான உறுதிமொழியினை கலெக்டர், மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் ஏற்றுக்கொண்டனர்.

# திருஇந்தளூர் பரிமள ரெங்கநாதர் கோவிலில் பாலாலயம்



தரங்கம்பாடி, செப். 6

6 யாக குண்டங்கள் அமைக்கப்பட்டு சிறப்பு வேள்விகளுடன் யாக சாலை பூஜைகள் நடைபெற்றது. தை மாதத்தில் கும்பாபிஷேகம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மயிலாடுதுறை திருஇந்தளூரில் 108 வைணவ திவ்ய தேசங்களில் 22 வது ஆலய மானபரிமள ரெங்கநாதர் ஆலயம் அமைந்துள்ளது. காவிரி வடக்கு பகுயில் பெருமாள் பள்ளிகொண்ட நிலையில் அமைந்துள்ள ஸ்ரீரங்கம் ,சாரங்கம் உள்ளிட்ட ஐந்து அரங்கங்களில், ஐந்தாவது ஆலயமாக இது போற்றப்படுகிறது. இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள இந்த ஆலயத்தின் கும்பாபிஷேகம் கடந்த 2009 ம் ஆண்டு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 14 ஆண்டுகளுக்குப் பிறகு கும்பாபிஷேக திருப்பணிகள் துவங்கியுள்ளன. இதற்காக கோபுரங்களுக்கு பாலாலயம் செய்யும் நிகழ்ச்சி ஆலயத்தில் வெளிப்பிரகாரத்தில் நடை பெற்றது. 6 யாக குண்டங்கள் அமைக்கப்பட்டு சிறப்பு வேள்விகளுடன் யாகசாலை பூஜைகள் நடைபெற்றது.தொடர்ந்து மகாபூர்ணாகுதி யுடன் பாலாலயம் செய்யப்பட்டது. பின்னர் புனித கடங்கள் சுபமுகூர்த்த பந்தல் கால் மேளதாளங்கள் முழங்க ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு ஆலய முகப்பில் பந்தல்கால் நடப்பட்டது. இந்து அறநிலையத்துறையுடன் ராமானுஜ பக்த கைங்கரிய சபா இணைந்து நடைபெற்ற இந்த திருப்பணியில் தை மாதத்தில் கும்பாபிஷேகம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மயிலாடுதுறை காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் ராஜ்குமார், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா முருகன், நகர மன்ற துணைத் சிவகுமார், இந்து அறநிலையத்துறை உதவி ஆணையர் முத்துராமன், செயல் அலுவலர் ரம்மியா, மேலாளர் விக்கினேஷ்வரன், நகர கவுன்சிலர் ரிஷி, ஒன்றிய கவுன்சிலர் மோகன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர்.

# காஞ்சிபுரம் மாவட்ட ஏரிகளில் 190 வகை புதிய பறவைகள் வெளிநாடுகளில் இருந்து வருகை



காஞ்சிபுரம், செப். 6

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 381 ஏரிகள் உள்ளன. இந்த ஏரிகளில் பெரும்பாலானவை பாசனத்துக்கு கை கொடுப்பதாக உள்ளன.

இந்த ஏரிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் வெளிநாடுகளில் இருந்து அரிய வகை பறவைகள் வந்து செல்வதுவழக்கம். உணவு மற்றும் இனபெருக்கத்துக்காக வரும் இந்த பறவைகள் சில மாதங்கள் ஏரிகளில் தங்கி இருந்துவிட்டு மீண்டும் பறந்து சென்று விடும். தற்போது காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 6 ஏரிகளில் அதிகளவு வெளிநாட்டு பறவைகள் வந்து இருப்பது தெரிய வந்துள்ளது.

வழக்கமாக செப்டம்பர் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை வெளிநாட்டு பறவை கள் காஞ்சிபுரம் ஏரிகளுக்கு அதிகளவு வருவது உண்டு. அந்த வகையில் வந்துள்ள இந்த பறவைகள் வழக்கத்தை விட கூடுதல் ஏரிகளில் தங்கி உள்ளன.

ஒரகடம், நாவலூர், மணிமங்கலம், ஆதனூர் ஏரிகளிலும் வெளிநாட்டு பறவைகள் அதிகம் வந்திருப்ப தை பறவைகள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். வெளிநாட்டு பறவைகளில் எந்தெந்த வகை பறவைகள் தற்போது வந்துள்ளன என்பது குறித்து சமீபத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப் போது காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஏரிகளுக்கு 190க்கும் மேற்பட்ட அரிய வகை வெளிநாட்டு பறவைகள் வந்து இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. நாவலூர் ஏரியில் வெளிநாட்டு வகை வாத்துக்கள் நூற்றுக்கணக்கில் குவிந்துள்ளன. ஸ்ரீபெரும்புதூர் ஏரியில் 2016ம் ஆண்டுக்கு பிறகு புதிய வகை பறவைகள் வந்து இருப்பது உறுதி செய்யப்பட்டது. காஞ்சிபுரம் மாவட்ட ஏரிகளுக்கு வரும் வெளிநாட்டு பறவைகளை சில கிராம மக்கள் பிடிப்பது தெரிய வந்துள்ளது. இதற்கு பறவை ஆராய்ச்சியாளர்கள் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

நீர்நிலைகளை தேடி வரும் பறவைகளை வேட்டையாடினால் அவற்றின் வருகை குறைந்து விடும் என்று எச்சரித்துள்ளனர். சமீபத்தில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் சில கிராமங்களில் அரிய வகை பறவைகளை பிடித்து கூண்டுகளில் அடைத்து சிலர் விற்பனை செய்வது கண்டுபிடிக்கப் பட்டது. அவர்களை கைது செய்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பறவை இன ஆராய்ச்சியாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# பட்டாவில் பெயர் நீக்க ரூ.25 ஆயிரம் லஞ்சம் வாங்கி கைதானபெண் கிராம நிர்வாக அதிகாரி

பரமத்திவேலூர், செப். 6

லஞ்சம் கொடுக்க விரும்பாத ஜெகநாதன் இதுகுறித்து நாமக்கல் லஞ்ச ஒழிப்பு துறை போலீசில் புகார் அளித்தார். மறைந்திருந்த லஞ்சஒழிப்புத்துறை இன்ஸ்பெக்டர் நல்லம்மாள் மற்றும் போலீசார் தீபாவை கைது செய்தனர்.

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகா பாண்டமங்கலம் பகுதியை சேர்ந்தவர் விஸ்வநாதன். இவரது மனைவி தீபா (43). இவர் கபிலர் மலை ஊராட்சி ஒன்றியம் கொந்தளம் ஊராட்சியில் கிராம நிர்வாக அலுவலராக வேலை பார்த்து வந்தார். இந்நிலையில் அதே பகுதியை சேர்ந்த விவசாயி ஜெகநாதன் (45) என்பவர் பட்டாவில் உள்ள பூர்வீக சொத்தில் இருந்து பெயர் நீக்கம் செய்ய ஊராட்சி நிர்வாக அலுவலகத்தில் விண்ணப்பித்தார். இதையடுத்து கிராம நிர்வாக அலுவலர் தீபா, பட்டாவில் பெயர் நீக்கம் செய்ய ஜெகநாதனிடம் ரூ.25 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக தெரிகிறது. ஆனால் லஞ்சம் கொடுக்க விரும்பாத ஜெகநாதன் இதுகுறித்து நாமக்கல் லஞ்சஒழிப்புதுறை போலீசில் புகார் அளித்தார். இதன் பேரில் லஞ்ச ஒழிப்பு போலீசார் ரசாயன பவுடர் தடவிய ரூபாய் நோட்டுகளை ஜெகநாதனிடம் கொடுத்து அதனை கிராம நிர்வாக அலுவலரிடம் கொடுக்குமாறு அனுப்பி வைத்தனர். அதன்படி நேற்று மதியம் ஜெகநாதன் கொந்தளம் கிராம நிர்வாக அலுவலகத்துக்கு சென்றார். அங்கிருந்த தீபாவிடம் ரசாயன பவுடர்தடவிய ரூ.25 ஆயிரத்தை கொடுத்தார். அதை வாங்கிய தீபா தனது மொபட்டிற்குள்பணத்தை வைத்துவிட்டு வந்தார். அப்போது அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்புத் துறை இன்ஸ்பெக்டர் நல்லம்மாள் மற்றும் போலீசார் தீபாவை கைது செய்தனர்.

தொடர்ந்துதீபாமொபட்டில் வைத்திருந்த பணத்தை கைப்பற்றியதுடன் மொபட்டையும் பறிமுதல் செய்தனர். பின்னர் அவரை நாமக்கல் லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்துக்கு போலீசார் அழைத்து சென்று விசாரணை நடத்தினர். இதை தொடர்ந்து தீபாவை நாமக்கல் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சேலம் பெண்கள் கிளை சிறையில் போலீசார் அடைத்தனர்.

மேலும் அவர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இந்நிலையில் இன்று நாமக்கல் லஞ்ச ஒப்பு துறை போலீசார் தீபாவின் வீட்டிற்கு சென்று சோதனை நடத்தி விசாரணை நடத்துகின்றனர்.

# ஏவிளம் கால்வாயின் குறுக்கே பாலம் விஜய் வசந்த் எம்.பி. திறந்து வைத்தார்



கன்னியாகுமரி, செப். 6

ஏவிளம் கால்வாயின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை வைத்தனர். இரவிப்புத்தன்துறையில் ஏவிளம் கால்வாயின் குறுக்கே பாலம் கட்டப்பட்டது. புத்தூர் ஊராட்சி இரவிப்புத்தன்துறையில் ஏவிளம் கால்வாயின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை வைத்தனர். அதன்படி பாராளு மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் மகாத்மா காந்தி கிராமப்புறம் மேம்பாடு திட்டம் நிதி மொத்தம் ரூ. 48. 50 லட்சம் ஒதுக்கப்பட்டது. இந்த நிதியிலிந்து இரவிப்புத்தன்துறையில் ஏவிளம் கால்வாயின் குறுக்கே பாலம் கட்டப்பட்டது. இந்த பலத்தை விஜய் வசந்த் எம்.பி. உள்ளிட்டோர் திறந்து வைத்தனர்.

# கூடலூர் பகுதியில் சிமெண்ட் சாலை நகர்மன்ற தலைவர் திறந்து வைத்தார்



ஊட்டி, செப். 6

ஜே.பி.கார்டன் குடியிருப்பு பகுதியில் நகராட்சி சார்பில் 400 மீட்டர் தூரத்துக்கு சிமென்ட் சாலை அமைக்கப்பட்டு உள்ளது. புதிய சாலையை நகர்மன்றத் தலைவர் பரிமளா ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

கூடலூர் நகராட்சி, 20 வது வார்டுக்கு உள்பட்ட ஜே.பி.கார்டன் பகுதியில் சாலை வசதி செய்துதர வலியுறுத்தி, அப்பகுதி மக்கள் கடந்த 12 ஆண்டுகளாக வலியுறுத்தி வந்தனர். இந்த நிலையில் அந்த சாலைக்கான இடம் பதிவு செய்யப்பட்டு நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது. தொடர்ந்து ஜே.பி.கார்டன் குடியிருப்பு பகுதியில் நகராட்சிசார்பில் 400மீட்டர் தூரத்துக்கு சிமென்ட் சாலை அமைக்கப்பட்டு உள்ளது.

இந்த புதிய சாலையை நகர்மன்றத் தலைவர் பரிமளா ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் நகர்மன்ற உறுப்பினர் லீலா வாசு, ஜே.பி. கார்டன் குடியிருப்போர் சங்கத்தலைவர் சிங்காரம், செயலாளர் வினோத்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# போக்குவரத்து சிக்னல்களில் ஒலிக்கும் 'கரோக்கி' இன்னிசை

மதுரை, செப். 6

மதுரை மதுரையில் போக்கு வரத்து சிக்னலில் காத்தி ருக்கும் வாகன ஓட்டிகள் கடந்த சில நாட்களாக இனிய அனுபவத்தை சந்தித்து வருகிறார்கள். சிக்னலில் காத்திருக்கும் போது காற்றில் மிதந்து வரும் கரோக்கி இன்னிசையால் வாகன ஓட்டிகள் இன்ப அதிர்ச்சி அடைந்து வருகின்றனர். சிக்னல்களில் காத்தி ருக்கும் போது எரிச்சல் அடைபவர்கள் அதிகம் இதனால் அவர்கள் வாகனத்தில் வெறுப்புடன் காத்திருப்பார்கள். ஆனால் தற்போது சிக்னலில் காத்திருக்கும் போது இனிமையான இசை காதுகளில் தாலாட்டு வதால் எரிச்சல் அடை யாமல் காத்திருக்கின்றனர். மேலும் இடையிடையே இரு சக்கர வாகனம் இருவர் செல்வதற்காக மட்டுமே படியில் பயணம் நொடியில் மரணம் வேகமாக வாகனத்தை இயக்க வேண்டாம்.

ஹெல்மெட் அணிவது அவசியம் போன்ற விழிப்புணர்வு வாசகங்களும் இடம் பெறுகின்றன. இதற்கு வாகன ஓட்டிகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. குறிப்பாக போக்குவரத்து சிக்னலில் அதிக நேரம் காத்திருக்கும் கோரிப்பாளையம், காளவாசல், ஆரப்பாளையம், தெற்குவாசல், பெரியார் நிலையம், கீழவாசல் சிக்னல்களில் காத்திருப்பவர்கள் இந்த நடைமுறை அறிமுகம் செய்யப்பட்டதை பெரிதும் வரவேற்கின்றனர்.

இதுகுறித்து போக்குவரத்து இன்ஸ்பெக்டர் தங்கமணி கூறியதாவது: சென்னை திருச்சி நகரங்களில் சிக்னல்களில் கரோக்கி இசையை ஒலி பரப்பும் நடைமுறைக்கு வரவேற்பு கிடைத்ததை அடுத்து மதுரை போலீஸ் கமிஷனர் லோகநாதன் போக்குவரத்து துணை கமிஷனர் குமார் ஆகியோரின் முயற்சியில் கடந்த 28ந்தேதி முதல் மதுரையில் செயல்பட்டு வருகிறது. மதுரை மாநகரில் உள்ள 32 சிக்னல்களில் கரோக்கி இசை ஒலிபரப்பு செயல் பாட்டில் இருக்கிறது. போக்குவரத்து கூடுதல் துணை ஆணையர் திருமலை குமார் வழிகாட்டு தலில், போக்குவரத்து உதவி ஆணையர்கள் செல்வின் மாரியப்பன் ஆகியோரின் மேற்பார்வை யில் இந்தத் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. சிக்னலில் வாகனங்களில் காத்திருக்கும் போது வாகன ஓட்டிகளை அமைதியான மன நிலைக்கு கொண்டு வரும் முயற்சியாக இந்த திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இதற்கு நல்ல பலன் கிடைத்துள்ளது. வாகன ஓட்டிகளும் இதனை வரவேற்கின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.


# காகித கூழால் தயாரிக்கப்பட்ட விநாயகர் சிலைகள் விற்பனை மும்முரம்



தஞ்சாவூர், செப். 6


நாடு முழுவதும் விநாயகர் சதுர்த்தி விழா வருகிற 18ந் தேதி கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் விநாயகர் சிலைகளை வைத்து பொதுமக்கள் வழிபடுவது வழக்கம். இது தவிர அனைத்து விநாயகர் கோவில்கள், சன்னதிகளில் சிறப்பு வழிபாடு, பூஜைகள் நடைபெறும். விநாயகர் சதுர்த்தி விழாவுக்கு இன்னும் 13 நாட்களே இருப்பதால் விநாயகர் சிலைகளின் விற்பனையும் மும்முரம் அடைந்துள்ளன. அதன்படி தஞ்சை வெண்ணாற்றங்கரை ஆனந்த வல்லியம்மன் கோவில் தெருவில் நரசிம்மா ஹேண்டி கிராப்ட் மூலம் பல வண்ணங்களில் பல வகைகளில் காகித கூழால் தயாரிக்கப்பட்ட விநாயகர் சிலைகள் விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டுள்ளது. அரை அடி முதல் 6 அரை அடி வரையிலான விநாயகர் சிலைகள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன. அனைத்து விநாயகர் சிலைகளும் எந்தவித ரசாயனமும் இல்லாமல் இயற்கையான முறையில் பல விதங்களில் வர்ணம் பூசப்பட்டுள்ளது. தஞ்சை மட்டுமல்லாது அரியலூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை உள்பட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்தவர்களை ஏராளமானோர் ஆர்வத்துடன் விநாயகர் சிலைகளைவாங்கிசென்ற வண்ணம் உள்ளனர். இது குறித்துநரசிம்மாஹேண்டி கிராப்ட் பூங்குழலி சண்முகம் கூறும் போது: காஞ்சிபுரத்தில் இருந்து பலவித வண்ணங்களில் எந்தவித ரசாயன கலப்பும் இல்லாமல் காகித கூழால் தயாரிக்கப்பட்ட விநாயகர் சிலைகளை வாங்கி விற்பனை செய்து வருகிறோம். ரூ.10 முதல் ரூ.20 ஆயிரம் வரையிலான விநாயகர் சிலைகள் உள்ளது. லாரிகள் மூலம் அனைத்து சிலைகளும் கொண்டுவரப்படுகிறது. லாரி வாடகை, மூலப் பொருட்களின் விலை உயர்வு ஆகியவற்றால் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு சிலைகளின் விலை சற்று உயர்ந்துள்ளது. இருந்தாலும் பொது மக்கள் ஆர்வத்துடன் விநாயகர் சிலைகளை வாங்கி செல்கின்றனர். எங்களிடம் உள்ள சிலைகள் அனைத்தும் காகித கூழால் தயாரிக்கப்பட்டது. இதனால் நீர் நிலைகளில் கரைக்கும் போது எளிதில் கரைந்து விடும். சிம்ம விநாயகர், அன்னபட்சி விநாயகர், மயில்வாகன விநாயகர் உள்ளிட்ட பல்வேறு வகைகளில் விநாயகர் சிலைகள் உள்ளன. விற்பனையும் மும்முரமாக நடந்து வருகிறது என்றார்.

# முத்தையா முரளீதரனின் வாழ்க்கை வரலாறு படம் "800"ன் டிரைலரை வெளியிட்டார் சச்சின் தெண்டுல்கர்




டெஸ்ட் கிரிக்கெட்டில் அழிக்க முடியாத வரலாற்று சாதனையை படைத்தவர் முத்தையா முரளீதரன். இவர் 800 விக்கெட்டுகள் வீழ்த்தி சாதனைப் படைத்துள்ளார். அவரது வாழ்க்கை வரலாறு "800" என்ற பெயரில் படமாக்கப்பட்டுள்ளது. இந்த படத்தின் டிரைலரை, இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் தெண்டுல்கர் வெளியிட்டார். தொடர்ந்து பேசிய சச்சின் தெண்டுல்கர் ''அவர்களுடன் போதுமான நேரம் செலவழிக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். சிறப்பான அம்சம் என்னவென்றால், பல வருடங்களுக்குப் பிறகும் நாங்கள் நல்ல நண்பர்களாகத் தொடர்கிறோம், ஒருவரையொருவர் சகஜமாக ரசிக்கிறோம். நிச்சயம் அனைவரும் படத்தைப் பார்க்கப் போகிறார்கள்.'' என்றார். இந்த விழாவில் இலங்கை அணியின் அதிரடி வீரராக திகழ்ந்த சனத் ஜெயசூர்யாவும் கலந்து கொண்டார்.

# தந்தையை இழந்த இளம் பாடகி.. ஆறுதல் சொல்லி தேற்றிய தமன்




சூப்பர் சிங்கர் நிகழ்ச்சி சீனியர், ஜூனியர் எனப் பிரிவுகளாக இளைஞர்களுக்கும், சிறு வயதினருக்குமாக நடைபெறுகிறது. இந்த பிரிவுகளிலிருந்து பல திறமையான பாடகர்கள் திரைத்துறையில் பிரபல பாடகர்களால் பல பாடல்கள் பாடி வருகின்றனர். மேலும் படிக்க தமிழின் முன்னணி தொலைக்காட்சியான விஜய் டிவியில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சி சூப்பர் சிங்கர். இசையில் சிறந்து விளங்குபவர்கள், கலந்துகொள்ளும் இந்த சூப்பர் சிங்கர் பாட்டு நிகழ்ச்சி, கடந்த 10 வருடங்களைக் கடந்து, வெற்றி நடைபோட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சி மூலம் பல பாடகர்கள் திரையுலகில் அறிமுகமாகி, பிரபல பாடகர்களாக திரைத்துறையில், கோலோச்சி வருகின்றனர். சூப்பர் சிங்கர் நிகழ்ச்சி சீனியர், ஜூனியர் எனப் பிரிவுகளாக இளைஞர்களுக்கும், சிறுவயதினருக்குமாகநடைபெறுகிறது.இந்தபிரிவுகளிலிருந்தும்பலதிறமையானபாடகர்கள்திரைத்துறையில் பிரபல பாடகர்களால் பல பாடல்கள் பாடி வருகின்றனர். இந்நிகழ்ச்சியில், இளம் சிறுமி சனு மித்ரா தனது அற்புத குரலில் அனைவரையும் ஆச்சரியப்படுத்தி வருகிறார். கடந்த வார நிகழ்ச்சியில் அவரின் கதையை பகிர்ந்துகொண்டபோது,மொத்தஅரங்கமும்சோகத்தில் ஆழ்ந்தது.





சனு மித்ராவின் இசை ஆசைக்கு, உறுதுணையாக இருந்த பாசமிகு தந்தை, சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியின் முதல் கட்ட ஆடிசனுக்கு அவரைக் கூட்டி வந்து செல்கையில், விபத்தில் பறிபோன கதையைப் பகிர்ந்து கொண்டார். சூப்பர் சிங்கர் இசைப்போட்டியில் ஜெயிக்க வேண்டும் எனும் அவரது தந்தையின் கனவை நனவாக்க, தன் தாயின் துணையுடன் போராடும் சனு மித்ராவின் பயணம் அனைவரையும் உருக வைத்தது. இதைத் தொடர்ந்து தொகுப்பாளிணி பிரியங்கா, என் தந்தையையும் என்னுடைய 11 வயதில் ஹார்ட் அட்டாக்கில் இழந்தேன். என் அம்மா தான் தந்தையை போல் பார்த்து கொண்டார். தந்தை நம்மை எப்போதும், நம்மோடு இருந்து, ஆசிர்வதிப்பார் என்று ஆறுதல் சொன்னார். இந்நிகழ்ச்சியில் நடுவராக இருந்து வரும் இசையமைப்பாளர் தமன், தன் தந்தை குறித்துப் பகிர்ந்து கொண்டார். அதில், ரயிலில் பயணிக்கையில் ஹார்ட் அட்டாக்கால் பாதிக்கப்பட்டு என் தந்தை என்னுடைய 9 வயதில் தவறிவிட்டார் என தன் சோகத்தை பகிர்ந்தவர், சனுவிடம் "நாங்கள் அனைவரும் உன் கூட இருப்போம், எதற்கும் கவலைப்படக்கூடாது" என்று ஆறுதல் கூறினார். மேலும் ஆண்டனி தாசன் அவர்கள் அந்த சிறுமியின் துக்கத்தைப் போக்கும் விதமாக, அவர் தந்தை குறித்து ஒரு அருமையான பாடலை பாடி அனைவரையும் உருகவைத்தார். இந்த வாரம் நடந்த இந்த நிகழ்வு அனைவரையும் நெகிழ வைத்ததாக அமைந்தது.

# இந்தியாவின் பெயரை பாரத் என மாற்ற அமிதாப் பச்சன் ஆதரவு?



இந்திய திரையுலகின் முன்னணி நடிகராக வலம் வருபவர் அமிதாப் பச்சன். இவர் தற்போது பிரபாஸ் நடிப்பில் உருவாகி வரும் புராஜெக்ட் கே திரைப்படத்தில் நடித்து வருகிறார். அமிதாப் பச்சன் சமூக ஊடகத்தில் தனது பணி சார்ந்த விசயங்கள், முக்கிய நிகழ்வுகள் உள்ளிட்ட விவரங்கள் மற்றும் புகைப்படங்கள்ஆகியவற்றைஅவ்வப்போதுரசிகர்களுக்குபகிர்ந்துகொள்வது வழக்கம். இந்நிலையில், இவர் தற்போது தனது சமூக வலைதளத்தில் 'பாரத் மாதா கி ஜெய்' என்று இந்தியில் குறிப்பிட்டுள்ளார். இது ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும், மத்திய அரசின் முடிவுக்கு அமிதாப் பச்சன் ஆதரவு தெரிவிப்பதாகவும் நெட்டிசன்கள் விமர்சித்து வருகின்றனர். குடியரசு தலைவர் மாளிகை தரப்பில் அனுப்பிய ஜி20 உச்சி மாநாட்டிற்கான அழைப்பிதழில் இந்திய குடியரசுத் தலைவர் என்பதற்குப் பதிலாக பாரத் குடியரசுத் தலைவர் என அச்சிடப்பட்டிருந்தது. ஏற்கனவே, சிறப்பு பாராளுமன்ற கூட்டம் கூட்டப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. இதனால் இந்தியா என்ற பெயரை பாரத் என மாற்றப்படலாம் என உறுதிப்படுத்தப்படாத தகவல் வெளியாகியுள்ளது.

# பெயரை மாற்றுவது எப்படி பொருளாதார வளர்ச்சிக்கு உதவும்..? விஷ்ணு விஷால் கேள்வி



வெண்ணிலா கபடி குழு, குள்ளநரி கூட்டம், நீர்பறவை, முண்டாசுப்பட்டி, ஜீவா, இன்று நேற்று நாளை, ராட்சசன், எஃப்ஐஆர் உள்ளிட்ட பல படங்களில் நடித்து ரசிகர்களை கவர்ந்தவர் விஷ்ணு விஷால். இவர் தற்போது ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கத்தில் உருவாகி வரும் லால் சலாம் படத்தில் நடித்துள்ளார். இப்படத்தில் ரஜினி சிறப்பு தோற்றத்தில் நடித்திருக்கிறார். 'லால் சலாம்' படத்தின் படப்பிடிப்புபணிகள்நிறைவடைந்துபோஸ்ட்புரொடக்ஷன்பணிகள்நடைபெற்று வருகிறது. இந்நிலையில், நடிகர் விஷ்ணு விஷால் 'பாரத்' பெயருக்கு எதிர்ப்பு தெரிவித்து பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில், "நாட்டின் பெயரை மாற்றுவது எப்படி பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு உதவும்? இது மிகவும் விசித்திரமாக உள்ளது. இந்தியா எப்போதும் 'பாரத்' ஆகவே இருந்தது. நம் நாட்டை இந்தியா என்றும் பாரத் என்றும் நாம் அறிவோம். திடீரென ஏன் இந்தியா என்ற பெயரை துறக்க வேண்டும்?" என்று குறிப்பிட்டுள்ளார். குடியரசு தலைவர் மாளிகை தரப்பில் அனுப்பிய ஜி20 உச்சி மாநாட்டிற்கான அழைப்பிதழில் இந்திய குடியரசுத் தலைவர் என்பதற்குப் பதிலாக பாரத் குடியரசுத் தலைவர் என அச்சிடப்பட்டிருந்தது. ஏற்கனவே, சிறப்பு பாராளுமன்ற கூட்டம் கூட்டப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. இதனால் இந்தியா என்ற பெயரை பாரத் என மாற்றப்படலாம் என உறுதிப்படுத்தப்படாத தகவல் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பிரபலங்களை சந்தித்த வெங்கட் பிரபு.. இதுதான் காரணம்



முன்னணி இயக்குனரான வெங்கட் பிரபு இயக்கத்தில் கடந்த 2008ஆம் ஆண்டு வெளியான திரைப்படம் 'சரோஜா'. இப்படத்தில் வைபவ், பிரகாஷ் ராஜ், எஸ். பி.சரண், பிரேம்ஜி, காஜல்அகர்வால் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தனர். இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்திருந்தார். ஆக்ஷன், காமெடி ஜானரில் உருவாகியிருந்த இப்படம் ரசிகர்கள் மத்தியில் பெரிதும் பேசப்பட்டது. இப்படத்தில் இடம்பெற்றிருந்த பாடல்கள் அனைத்தும் சூப்பர்ஹிட். அதிலும் 'கோடான கோடி' பாடல் பட்டித் தொட்டி எங்கும்பரவிஇன்றுவரையிலும்மக்களைவைப்பாக்கும் ஒரு பாடலாக இருக்கிறது. 'சரோஜா' திரைப்படம் வெளியாகி 15 ஆண்டுகள் கடந்துள்ளது. இதனை மும்பையில் படக்குழு கொண்டாடியுள்ளது. இதில் இயக்குனர் பா.இரஞ்சித் கலந்து கொண்டுள்ளார். மேலும், விமான நிலையத்தில் நடிகர் சூர்யாவை இயக்குனர் வெங்கட் பிரபு சந்தித்துள்ளார். இது தொடர்பான புகைப்படத்தை வெங்கட் பிரபு தனது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.



# முகமது நபி போராட்டம் வீண் ஆப்கானிஸ்தானை வீழ்த்தி சூப்பர் 4 சுற்றுக்குள் நுழைந்தது இலங்கை

முகமது நபி போராட்டம் வீண் ஆப்கானிஸ்தானை வீழ்த்தி சூப்பர் 4 சுற்றுக்குள் நுழைந்தது இலங்கை 5 செப்டம்பர் 2023 10:36 PM டாஸ் வென்ற இலங்கை பேட்டிங் தேர்வு செய்தது. அதன்படி முதலில் ஆடிய இலங்கை 291 ரன்கள் குவித்தது.

லாகூர்: ஆசிய கோப்பை கிரிக்கெட்டில் லாகூர் கடாபி ஸ்டேடியத்தில் இன்று நடந்த கடைசி லீக் போட்டியில் நடப்பு சாம்பியன் இலங்கையும், ஆப்கானிஸ்தானும் மோதின. டாஸ் வென்ற இலங்கை பேட்டிங் தேர்வு செய்தது. அதன்படி முதலில் ஆடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 291 ரன்கள் குவித்தது. குசால் மெண்டிஸ் பொறுப்புடன் ஆடி 92 ரன்கள் எடுத்தார். பதும் நிசங்கா 41 ரன்னும், அசலங்கா 36 ரன்னும், துனித் வெல்லேலகே 33 ரன்னும் எடுத்தனர். ஆப்கானிஸ்தான் சார்பில் குல்பதின் நயீன் 4 விக்கெட் வீழ்த்தினார்.

இதையடுத்து, 292 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆப்கானிஸ்தான் களமிறங்கியது. 37.1 ஓவரில் வெற்றி இலக்கை எட்டினால் சூப்பர் 4 சுற்றுக்கு தகுதிபெறலாம் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அந்த அணியின் முகமது நபி 32 பந்தில் 5 சிக்சர், 6 பவுண்டரி உள்பட 65 ரன்கள் விளாசினார். ஹஷ்மதுல்லா ஷகிடி 59 ரன்கள் எடுத்தார். ரஹ்மத் ஷா 45 ரன்கள் சேர்த்தார். கடைசி கட்டத்தில் ரஷித்கான்அதிரடியாகஆடி27ரன்கள்சேர்த்து ஆட்டமிழக்காமல்உள்ளார். இறுதியில் ஆப்கானிஸ்தான்289ரன்களுக்கு ஆல்அவுட்டானது. இதன்மூலம் 2 ரன் வித்தியாசத்தில் வென்ற இலங்கை சூப்பர் 4 சுற்றுக்குள் நுழைந்தது. இலங்கை சார்பில் காசுன் ரஜிதா 4 விக்கெட்டும், துனித் வெல்லலகே, தனஞ்செய டி சில்வா தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

# எங்காகிலும் பார்த்தது உண்டா.. நேபாளம் வீரர்களுக்கு பதக்கம் வழங்கி பாராட்டிய இந்திய வீரர்கள் வீடியோ



முதலில் பேட்டிங் செய்த நேபாளம் அணி 48.2 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 130 ரன்கள் எடுத்தது. இந்திய அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரின் நேற்றைய ஆட்டத்தில் இந்தியா நேபாளம் அணி மோதியது. இதில் முதலில் பேட்டிங் செய்த நேபாளம் அணி 48.2 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 130 ரன்கள் எடுத்தது. தொடக்க ஆட்டக்காரர்களான குஷால் புர்டெல் ஆசிப் ஷேக் ஜோடி இந்திய அணியின் பந்து வீச்சை சிறப்பாக எதிர் கொண்டு விளையாடினர். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 65 ரன்கள் எடுத்தது. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஆசிப் ஷேக் 58 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த வீரர்கள் சொற்ப ரன்னில் வெளியேற ஆல் ரவுண்டர் சோம்பால் காமி கடைசியில் வந்து 48 ரன்கள் குவித்து அணிக்கு நல்ல ஸ்கோரை எடுக்க உதவினார். இதனையடுத்து களமிறங்கிய இந்திய அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்நிலையில் போட்டி முடிந்த பிறகு இந்திய அணியின் பந்து வீச்சை சிறப்பாக எதிர் கொண்டு விளையாடிய நேபாளம் அணி வீரர்களுக்கு இந்திய அணி சார்பில் பதக்கம் வழங்கப்பட்டது. ஆல் ரவுண்டர் சோம்பால் காமிக்கு ஹர்திக் பாண்ட்யாவும் அரை சதம் விளாசிய ஆசிப் ஷேக்கிற்கு விராட் கோலியும் பதக்கம் வழங்கினார். இந்த தருணத்தை நேபாளம் அணி தங்களது டுவிட்டரில் பதிவிட்டது. இந்த வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# உலகக் கோப்பையை வீட்டிற்கு எடுத்து செல்வோம்: இந்திய அணியில் இடம் பிடித்த வீரர்களுக்கு அஸ்வின் பாராட்டு



உலகக் கோப்பை தொடர் அக்டோபர் 5 முதல் நவம்பர் 19 வரை இந்தியாவில் நடைபெற உள்ளது. இதற்காக அனைத்து அணி வீரர்களும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் உலகக் கோப்பைக்கான 15 பேர் கொண்ட இந்திய அணியை பிசிசிஐ அறிவித்தது. இதில் கேப்டனாக ரோகித் சர்மாவும் துணை கேப்டனாக ஹர்திக் பாண்ட்யா நியமிக்கப்பட்டனர். ஆனால் இந்த அணியில் முக்கிய வீரர்கள் கழற்றி விடப்பட்டனர். தமிழக வீரர் அஸ்வின் மற்றும் தவான், சஞ்சு சாம்சன், திலக் வர்மா, சாஹல் போன்ற முக்கிய வீரர்கள் இந்திய அணியில் இடம் பிடிக்கவில்லை. இந்நிலையில் இந்திய அணியில் இடம் பிடித்த வீரர்களுக்கு தமிழக வீரர் அஸ்வின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது: உள்ளூரில் உலகக்கோப்பை நடப்பது எப்போதுமே சிறப்பு வாய்ந்தது. கோப்பையை நாம் அனைவரும் வீட்டிற்கு கொண்டு வருவோம் என கூறினார்.

# ஒருநாள் போட்டி ஓய்வு முடிவை அறிவித்த குயிண்டன் டி காக்



தென் ஆப்பிரிக்க அணியின் அதிரடி தொடக்க ஆட்டக்காரரான குயிண்டன் டி காக். இவர் 2021 டிசம்பரில் ஏற்கனவே டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். இந்நிலையில் இந்தியாவில் நடைபெறும் ஐசிசி உலகக் கோப்பைக்குப் பிறகு ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக குயின்டன் டி காக் அறிவித்துள்ளார். தனது குடும்பத்துடன் நேரத்தை செலவிட வேண்டியதால் இந்த முடிவை எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார். 30 வயதான குயிண்டன் டி காக் தென்னாப்பிரிக்காவுக்காக டி20 போட்டிகளில் மட்டும் விளையாடுவார். 140 போட்டிகளில் இடம்பெற்றுள்ள அவர் 17 சதம் மற்றும் 29 அரை சதங்களுடன் 44.85 சராசரியுடன் 5966 ரன்களை எடுத்துள்ளார். டி காக் ஒருநாள் போட்டிகளில் 197 பேரை ஆட்டமிழக்கச் செய்துள்ளார். (183 கேட்சுகள், 14 ஸ்டம்பிங்).

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.